2003 நவம்பர் 3]

பெய்கின்ற மழைநீரிலே, மிக அதிகமான தண்ணீர் கடலிலே வீணாகக் கலக்கிறது. இவற்றைத் தடுத்து இந்தப் பகுதியிலே நிலத்தடி நீரை அதிகப்படுத்துகின்ற நோக்கத்தோடு ஆங்காங்கே சிறிய Check-dams அமைக்கும் திட்டம் இத்திட்டத்திலே ஏற்படுத்தப்படுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மழைநீரைச் சேகரிப்பதற்கு, தண்ணீர் கடலிலே விழுந்து அது வீணாகாமல் தடுப்பதற்கு ஆங்காங்கே தடுப்பு அணைகள் கட்டுவதற்கான திட்டம் அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 10, திரு. கே.வி. முரளிதரன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

10—

உருளைக்கிழங்கு பயிர்

•31949—திரு. கே.வி. முரளிதரன்:

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேன்கனிக்கோட்டை மற்றும் ஓசூர் ஆகிய வட்டங்களில் உருளைக்கிழங்கு பயிரிடுவோர்க்கு தரம் குறைந்த ரகத்தைச் சேர்ந்த உருளைக்கிழங்குகள் வழங்கப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) இது தொடர்பாக அரசுக்கு ஏதேனும் அறிக்கை வரப்பெற்றுள்ளதா?

(இ) ஆம் எனில், எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

முற்பகல் 11-25

மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தேன்கனிக்கோட்டை மற்றும் ஓசூர் ஆகிய பகுதிகளில் உருளைக்கிழங்கு பயிர் செய்வதற்கு அதன் கிழங்குகளே விதையாகப்

TAMIL NADU LEGISLATURE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

பயன்படுத்தப்படுகின்றன. தோட்டக்கலைத் துறை மூலம் விதைகள் விநியோகம் செய்யப்படுவதில்லை. இதற்கான திட்டமும் செயல்படுத்தப்படுவதில்லை. இப்பகுதியைச் சேர்ந்த உருளைக்கிழங்கு பயிர் செய்யும் விவசாயிகள் சில தனியார் நிறுவனங்களிடமிருந்து உருளைக்கிழங்கு விதைகளைப் பெற்றுப் பயிர் செய்து வருகின்றார்கள்.

(ஆ) இதுவரை இப்பகுதியைச் சேர்ந்த உருளைக்கிழங்கு பயிர் செய்யும் விவசாயிகளிடமிருந்து எந்தவிதமான புகார்களோ/பிரச்சினைகளோ அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை.

(இ) கேள்விக்கிடமில்லை.

திரு. கே.வி. முரளிதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேன்கனிக்கோட்டை மற்றும் ஓசூர் ஆகிய வட்டங்களில் உருளைக்கிழங்கு பயிர் செய்யப்படுகிறது. கர்நாடகா மாநிலத்தைச் சேர்ந்த சிக்கபலாபுரம் என்ற ஒரு டவுனிலிருந்து உருளைக்கிழங்கு விதைகளை நாங்கள் வாங்கிக்கொண்டு வருகிறோம். கடந்த 2000-ல் இந்தக் கேள்வி போட்டோம். இப்போது வந்து இருக்கிறது. ஒரு ஏக்கருக்கு உருளைக்கிழங்கு 7 மூட்டை தேவைப்படுகிறது. 7 மூட்டைக்கு 250 மூட்டை வரைக்கும் எங்களுக்கு மகசூல் வரும். 2000-ல் நாங்கள் கேள்வி போடும்போது அப்போது 70 மூட்டைதான் வந்தது. அதுபற்றி நாங்கள் ஓசூரிலும், தளியிலும் போராட்டம் எல்லாம் செய்தோம். நாங்கள் Horticulture Officer-இடம் தெரிவித்து, அவர்கள் அரசுக்குத் தெரிவித்து இருக்கிறோம் என்று சொன்னார்கள். ஆனால் இதுவரைக்கும் விவசாயிகளுக்கு எந்த ஒரு நஷ்ட ஈடும் கொடுக்கவில்லை. அடுத்து அரசு ஆணை பிறப்பித்து நஷ்ட ஈடு கொடுக்குமா என்பதைப் பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் 5,561 எக்டேர் பரப்பில் உருளைக்கிழங்கு சாகுபடி செய்யப்பட்டு 1,00,688 மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்படுகிறது. உற்பத்தித் திறன் 18.11 மெட்ரிக் டன் ஆக இருக்கிறது. உருளைக்கிழங்கைப் பொறுத்தவரையில் உருளைக்கிழங்கு பயிர் செய்கிற விவசாயிகளிடமிருந்துதான் அவர்கள் அந்த விதைகளைப் பெற்று நடவு செய்கிற பழக்கம் இருந்து வருகிறது. அந்த விவசாயிகளே அவர்களுடைய நிலத்திலே உள்ள தரமான அந்த விதைகளை எடுத்து நடவு செய்து வருகிறார்கள். ஆகவே இதுபற்றி அரசினுடைய கவனத்திற்கு ஏதாவது

புகார் வந்தால் நிச்சயமாக அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே.வி. முரளிதரன்: அமைச்சருக்கு நன்றி. அதேபோல் அவர்கள் சம்பந்தமான ஒரு Question. விவசாயிகள் Vegetables-ஐ மார்க்கெட்டில் கொண்டு வந்து போட்டால் கமிஷன் 10% வாங்குகிறார்கள். ஆனால் seller கிட்டே 5% buyer கிட்டே 5%-தான் வாங்கவேண்டும் என்று உள்ளது. ஆனால் 10% கமிஷன் விவசாயிகளிடமே கேட்கிறார்கள். அதை 5% ஆகச் செய்துதர அரசு முன்வருமா எனப் பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதற்குத் தனியாக ஒரு கேள்வி போட்டால் அதற்குரிய பதிலை நாங்கள் தருகிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 11, திரு. ஜி. கோதண்டராமன், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

11—

மாணவியர் விடுதி

***35855—திரு. ஜி. கோதண்டராமன்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முகையூர், கண்டாச்சிபுரத்தில் ஆதிதிராவிட மாணவியர் விடுதி துவக்கும் கருத்துரு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) புதிய விடுதிகள் துவக்கும் செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. ஜி. கோதண்டராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருங்கால வளமான இந்தியாவை உருவாக்க தலைமை